# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 19 மடல் 5 மே 2019 ₹1.00

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிய சிடி ஸ்கேன் கருவியைத் திறந்துவைத்தார்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறை, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைச் சிகிச்சை வளாகம் ஆகிய இடங்களில் புதிதாக நிறுவப்பட்ட சிடி ஸ்கேன் கருவியைக் காணொலிக் காட்சி மூலம் 19.02.2019அன்று திறந்துவைத்தார்கள். சிடி ஸ்கேன் கருவி தமிழ்நாடு அரசின் ஆதரவுடன் பல்கலைக்கழகம் மற்றும் நபார்டு வங்கி நிதியுதவியில் நிறுவப்பட்டதாகும்.

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அதிநவீன உயிர்ப் பாதுகாப்பு ஆய்வகம்–நிலை 3 மற்றும் சிறிய விலங்கின ஆய்வக வசதியைத் திறந்துவைத்தார்கள்



இந்திய அளவில் மாநிலப் பல்கலைக்கழகங்களில் முதல் முறையாகத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு புதுமை நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூபாய் 12.75 கோடி மதிப்பில் அதிநவீன உயிர்ப் பாதுகாப்பு ஆய்வகம் – நிலை 3 மற்றும் சிறிய விலங்கின ஆய்வக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வசதியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சிமூலம்

04.03.2019அன்று திறந்துவைத்தார்கள். இந்த ஆய்வக வசதி மூலம் தீவிர நோயுண்டாக்கும் தன்மையுடைய நுண்ணுயிரிகளை நேரடியாகக் கண்டறியவும், ஆராய்ச்சி மற்றும் ஒழுங்குமுறை தர உறுதிச் சேவைகளை மேற்கொள்ளவும் முடியும்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் குழு வருகை



இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களின் கல்விசார் கூட்டிணைவுத் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கால்நடை அறிவியல் மற்றும் வேளாண் புலங்களின் 14 பேராசிரியர்களைக் கொண்ட குழு, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைச் சிகிச்சை வளாகம், பால் பொருள் தயாரிப்புக் கூடம் மற்றும் செல்லப்பிராணி உணவுத் தயாரிப்புக் கூடம், கோழிப் பண்ணை மற்றும் கால்நடைப் பண்ணை வளாகங்கள், கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தரக் கட்டுப்பாடு ஆய்வகம் ஆகிய பல்வேறு பிரிவுகளை 03.04.2019, 04.04.2019ஆம் தேதிகளில் பார்வையிட்டது. மேலும், கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் மற்றும் பேராசிரியர்களுடன் குழுவினர் கலந்துரையாடினர்.

### ஐக்கிய அரபு நாடுகளின் பருவ நிலை மாற்றக் குழு வருகை



ஐக்கிய அரபு நாடுகளின் பருவ நிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தைச் சார்ந்த முனைவர் அகமது சாஹரான் மற்றும் திருமதி சுமையா அல்ரெய்ஸ், வேளாண்சார் பதப்படுத்திய உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையப் பிரதிநிதி திருமதி சிமி உன்னி கிருஷ்ணன் ஆகியோரைக் கொண்ட குழுவினர் 13.04.2019அன்று நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை புரிந்தனர். இதையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் அமர்வில் குழுவினரைக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் வரவேற்று, கல்லூரியின் பல்வேறு பணிகளைக் குழுவினருக்கு விளக்கிக்கூறினார். மேலும், பேராசிரியர் மற்றும் தலைவரும் ‘கோழி வளர்ப்பு மண்டலங்கள் அமைத்தலுக்கான’ மத்திய அரசின் பிரதிநிதியாகிய முனைவர் கா. குமணன் அவர்கள் பல்கலைக்கழகத்தில் உள்ள நோய் கண்டறியும் வசதிகளைக் குழுவினருக்கு எடுத்துக்கூறி கோழி வளர்ப்பு மண்டலங்களை உருவாக்கும்போது கடைப்பிடிக்கப்படும் நெறிமுறைகளை விளக்கினார். நாமக்கல், கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் வி.பி. பொன்னுவேல் மற்றும் துறைசார் அலுவலர்கள், தொழில்முனைவோர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

### மாணவர்களுக்கான முதலாவது சிகிச்சை விவரக் கருத்தரங்கம்




பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநரகமும் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் இணைந்து பல்கலைக்கழக மாணவர்களுக்காகச் செல்லப்பிராணிகள், பண்ணை மற்றும் வனவிலங்குகள் குறித்த முதலாவது சிகிச்சை விவரக் கருத்தரங்கை 05.04.2019அன்று ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தின. கருத்தரங்கின் துவக்க விழாவில் முதன்மை விருந்தினராகப் பங்கேற்ற பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் கருத்தரங்கைத் துவக்கிவைத்துக் கருத்தரங்க மலர் வெளியிட்டார். மேலும், அவர் தமது உரையில் இக்கருத்தரங்கம் நமது மாணவர் மற்றும் ஆசிரியர்களிடையே கலந்துரையாடல் திறனை ஊக்கப்படுத்துவதற்காகவே நடத்தப்படுகிறது என்றார். சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கருத்தரங்கின் நிறைவு விழாவில் சிகிச்சையியல் இயக்குநர் அவர்கள் சிறந்த ஆய்வு அறிக்கை சமர்ப்பித்த மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி; நாமக்கல், ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களைச் சார்ந்த 67 மாணவர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டு கால்நடை மருத்துவச் சிகிச்சை பற்றிய ஆய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியும், ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் இணைந்து சிறந்த கல்லூரிக்கான சிகிச்சையியல் இயக்குநர் சுழற்கோப்பையை வென்றன.

### துணைவேந்தர் பங்கேற்பு

### இந்திரா காந்தி தேசியத் திறந்தநிலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா



இந்திரா காந்தி தேசியத் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் 32ஆவது பட்டமளிப்பு விழா, புதுதில்லியில் உள்ள அதன் தலைமையகத்திலும் நாடு முழுவதிலும் உள்ள அதன் மண்டல மையங்களிலும் 03.04.2019அன்று நடைபெற்றது. சென்னை மண்டல இந்திரா காந்தி தேசியத் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா, சென்னையில் உள்ள உலகப் பல்கலைக்கழகச் சேவை மையத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் விழாவில் முதன்மை விருந்தினராகப் பங்கேற்றுப் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் உயர் கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் நாடு முழுவதிலும் உள்ள உயர் கல்வி நிறுவனங்களை மும்மடங்காக அதிகரிக்க வேண்டும் என்றார்.

### கால்நடை மருத்துவர் சங்கத்தின் தொடர் கல்வித் திட்டம்

தமிழ்நாடு, பெரிய பிராணிகளுக்கான கால்நடை மருத்துவர் சங்கம் மூலம் 06.04.2019அன்று புதுச்சேரியில் நடத்தப்பட்ட "வெப்ப மண்டலக் கால்நடைகளின் உடல் நலம் தொடர்பான கொள்கைகள் குறித்த நான்காவது தொடர் கல்வித் திட்டம் – நமது சிகிச்சை முறையில் சேர்க்கப்பட வேண்டிய தகவல்கள்" குறித்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் முதன்மை விருந்தினராகப் பங்கேற்று, நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார்.

### கருத்துப்பகிர்வு அமர்வு

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள், புதுதில்லி தேசிய வேளாண் அறிவியல் வளாகத்தில் 15.04.2019அன்று நடைபெற்ற முதல்வர் குழுக்கள் / துறைசார் குழுக்களின் அறிக்கைகளில் புதிய பாடப் பிரிவுகளைச் சேர்த்தலுக்கான கருத்துப்பகிர்வு அமர்வில் பங்கேற்றார்.

### கல்லூரி நாள், விடுதி நாள் மற்றும் விளையாட்டு நாள் விழா

**திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** கல்லூரி நாள் மற்றும் விடுதி நாள் விழா 24.04.2019அன்று கொண்டாடப்பட்டது. விழாவிற்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் தலைமையுரை ஆற்றி, மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். மருத்துவர் ஆர். ராகவி, டாக்டர் வி. ஞானபிரகாசம் விருதினையும், பிரௌனி வசுஜி நினைவு விருதினையும், கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியலில் சிறந்த சிகிச்சையியல் கட்டுரை அளிப்பு விருதினையும் பெற்றார். மருத்துவர் எம்.பி. காவ்யா பௌ மற்றும் பான் டெக்னாலஜி சொல்லுஷன்ஸ் தனியார் நிறுவன விருதையும், மருத்துவர் எஸ். திருக்குமார் கால்நடை மருத்துவத்தில் சிறந்த சிகிச்சையியல் கட்டுரை அளிப்பு விருதையும், மருத்துவர் பி. சந்தியா கால்நடை இனப்பெருக்கம் மற்றும் ஈனியலில் சிறந்த



சிகிச்சையியல் கட்டுரை அளிப்பு விருதையும் பெற்றனர். கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ஜெ. ஜான்சன் ராஜேஸ்வர் அவர்கள் கல்லூரி ஆண்டறிக்கை அளித்தார். கல்லூரி விடுதிக் காப்பாளர் முனைவர் எஸ். பரமசிவன் அவர்கள் விடுதி அறிக்கை அளித்தார். முன்னதாக, மாணவர் மன்றத் துணைத் தலைவர் முனைவர் சு.கி. எட்வின் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். மாணவப் பிரதிநிதி செல்வன் வி. ரவிகுமார் நன்றி கூறினார். மாணவர்கள் பங்கேற்ற பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கல்லூரியின் விளையாட்டு நாள் விழா 23.04.2019அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் விளையாட்டுப் போட்டியைத் துவக்கிவைத்து, போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ஜெ. ஜான்சன் ராஜேஸ்வர் அவர்கள் விழாத் தலைமை வகித்து, தலைமையுரை ஆற்றினார். இளநிலைப் பட்ட நான்காம் ஆண்டு மாணவர்கள் செல்வன் ஜெ. ஜேடியா காப்ரியேல்



மற்றும் செல்வி சி. ஸ்ரீவித்யா ஆகியோர் தனிநபர் வாகையர் பட்டம் வென்றனர். சிறந்த விளையாட்டு வீரராக இளநிலைப் பட்ட இறுதியாண்டு மாணவர் செல்வன் இ. பிரதீப் தேர்வு செய்யப்பட்டார். உடற்கல்வி இயக்குநர் முனைவர் கே. சாந்தி அவர்கள் விளையாட்டுப் போட்டி ஆண்டறிக்கை சமர்ப்பித்தார்.

**ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி :** கல்லூரி நாள், விடுதி நாள் மற்றும் விளையாட்டுப் போட்டி விழா 10.04.2019அன்று கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் விழாவில் தலைமை விருந்தினராகப் பங்கேற்று, கல்லூரி ஆண்டு மலர் வெளியிட்டார். மேலும், ஆண்டுத் தேர்வுகளில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளையும், செயல்முறைக் கற்றல் பயிற்சித் திட்டத்தை நிறைவுசெய்த மாணவர்களுக்கு இலாபத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும், பல்வேறு கலை



நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கிச் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் கு. மணி அவர்கள் கல்லூரி ஆண்டறிக்கை வாசித்தார். கல்லூரி விடுதிக் காப்பாளர் பேராசிரியர் முனைவர் பெ. சம்சுதீன் விடுதி ஆண்டறிக்கையையும், விளையாட்டுப் போட்டிச் செயலாளர் உதவிப் பேராசிரியர் முனைவர் து. இளையபாரதி விளையாட்டுப் போட்டி ஆண்டறிக்கையும் வாசித்தனர். முன்னதாகக் கல்லூரியின் மாணவர் மன்றத் துணைத் தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் முனைவர் கோ. ராஜ்மனோகர் வரவேற்புரை ஆற்றினார். இறுதியாக, மாணவப் பிரதிநிதி செல்வன் ஆ. முருகேசன் நன்றி நல்கினார்.

### பெரிய பிராணிகளில் வாய்வழி மற்றும் இரத்தநாள வழித் திரவச் சிகிச்சை அளித்தல் பற்றிய பயிலரங்கு

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 50 கால்நடை மருத்துவர்களுக்குப் "பெரிய அசைபோடும் பிராணிகளில் வாய்வழி நீரேற்றம் மற்றும் இரத்தநாளங்கள்வழி விரைவான திரவச் சிகிச்சை அளித்தல்" பற்றிய பயிலரங்கு 12.04.2019அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் பயிலரங்க அமர்விற்குத் தலைமை வகித்து, தலைமையுரை ஆற்றினார். கால்நடைச் சிகிச்சை வளாகப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆர். இசக்கியல் நெப்போலியன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

### பயிற்சி

- கடலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் "மதிப்புக்கூட்டிய பால் மற்றும் பால் பொருட்கள் தயாரித்தல்" குறித்த கட்டணப் பயிற்சி 25.04.2019அன்று நடைபெற்றது. கடலூர் வேளாண் இணை இயக்குநர் திரு. அண்ணாதுரை அவர்கள் பயிற்சியில் பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.
- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் "நாட்டுக் கோழிகளைத் தாக்கும் நோய்கள் மற்றும் குஞ்சு பொரிக்கும் திறனை அதிகப்படுத்தும் வழிமுறைகள்" எனும் பயிற்சி 25.04.2019, 26.04.2019ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. பயிற்சியில் மொத்தம் 25 பண்ணையாளர்கள் பங்கேற்றனர்.

### உயர்கல்வி வாய்ப்புகள் பற்றிய பயிற்சி

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும் கிராமக் கல்வி மற்றும் மேம்பாட்டுச் சேவை நிறுவனமும் இணைந்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகள் பற்றிய பயிற்சியை 30.04.2019 அன்று கரூர் மாவட்டம், வீரராக்கியத்தில் நடத்தின. பயிற்சியில் மொத்தம் 50 பேர் பங்கேற்றனர்.

### மருத்துவப் பரிசோதனை முகாம்



இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக மேம்பாட்டு நிதியுதவியின்(2018–19)கீழ் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி விடுதியில் மருத்துவப் பரிசோதனை முகாம் 23.04.2019 மற்றும் 24.04.2019ஆம் தேதிகளில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் முகாமில் பங்கேற்றார். மொத்தம் 245 மாணவர்கள் மற்றும் 212 மாணவிகளிடம் இருந்து இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டன.

### விழிப்புணர்வு நிகழ்ச்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 10.04.2019அன்று "உயிர் மருத்துவக் கழிவுகள் மேலாண்மை" பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நாமக்கல், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய உதவிப் பொறியாளர் என். குணசேகரன் அவர்கள்

உயிர் மருத்துவக் கழிவுகளின் மேலாண் முறைகள் பற்றிய விரிவுரை வழங்கினார். நிகழ்ச்சியில் ஆசிரியர்கள், ஆய்வகத் தொழில்நுட்பர், கால்நடைப் பராமரிப்பாளர், தினக்கூலி ஊழியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் நான்காம், ஐந்தாம் ஆண்டு இளநிலைப் பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

### மருந்து உற்பத்தியாளர் மற்றும் மாணவர்கள் சந்திப்பு




ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இளநிலைப் பட்ட நான்காம் மற்றும் ஐந்தாம் (2014–15 மற்றும் 2015–16) ஆண்டுகளைச் சார்ந்த மாணவர்களுக்காக மருந்து உற்பத்தியாளர்கள் சந்திப்பு–2019, 03.04.2019அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் தி.சிவகுமார் அவர்கள் விழாத்துவக்கவுரையாற்றி, வினாடிவினாப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களும், மருந்து உற்பத்தியாளர்களுக்கு நினைவுப் பரிசும் வழங்கினார். கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் பாடத்தில் அதிக மதிப்பெண் பெற்ற இளநிலைப் பட்ட இறுதியாண்டு (2014–15) மாணவி செல்வி எம். தாமரைச்செல்விக்கு விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டன. சந்திப்பில் 12 மருந்து நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு கால்நடை மருந்துகளைக் காட்சிக்கு வைத்து, அவற்றின் பயன்கள் குறித்து விளக்கி, மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

### இளநிலைப் பட்ட மாணவர்களுக்கு அலம்பிக் பரிசுகள் வழங்கும் விழா

மும்பை அலம்பிக் கால்நடை மருத்துவப் பிரிவின் மூலம் கால்நடை மருத்துவ அறிவியல் இளநிலைப் பட்டப் படிப்பில் முதல் இரு இடங்கள் பெற்ற மாணவர்களுக்கு எக்ஸ்–செப்ட் மற்றும் எம்–செப்ட் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2016–2017 மற்றும் 2017–2018ஆம் கல்வி ஆண்டுகளில் முதல் இரு இடங்கள் பெற்ற இளநிலைப் பட்ட மாணவர்களுக்கு 15.04.2019அன்று அலம்பிக் பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் தலைமை வகித்தார். மும்பை அலம்பிக் கால்நடை மருத்துவப் பிரிவின் துணைத் தலைவர் திரு. ப. கருணாநிதி அவர்கள் சிறப்புரையாற்றி, முதல் இரு இடங்கள் பெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.10,000/– மற்றும் இரண்டாம் பரிசாக ரூ.7,500/– வழங்கிச் சிறப்பித்தார். மருத்துவர் டி.கவின் (முதல் பரிசு), மருத்துவர் என். சரண்யா (இரண்டாம் பரிசு) ஆகியோர் 2016–17ஆம் ஆண்டிற்கான பரிசுகளைப் பெற்றனர். மருத்துவர் டி. ஹேமலதா (முதல் பரிசு), மருத்துவர் எஸ். விஜய குமார் (இரண்டாம் பரிசு) ஆகியோர் 2017–18ஆம் ஆண்டிற்கான




பரிசுகளைப் பெற்றனர். கல்லூரியின் கல்விச் சிறப்புப் பிரிவுப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ப. செல்வராஜ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

### இளம் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டு நலப்பணித் திட்டப் பிரிவும் நெல்லை புறநகர் ரோட்டரி சங்கம் மற்றும் மாவட்ட நிர்வாகமும் இணைந்து "என் வாக்கு என் உரிமை" எனும் இளம் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியை 08.04.2019அன்று நடத்தின. திருநெல்வேலி மாவட்ட உதவி ஆட்சியர் மருத்துவர் என்.ஓ. சுகோபுத்ரா இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று, வாக்கு உரிமையைப் பயன்படுத்தும்படி மாணவர்களை ஊக்கப்படுத்தினார். கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் ஜெ. ஜாண்சன் ராஜேஸ்வர், மாணவர் மன்றத் துணைத்தலைவர் முனைவர் சு.கி. எட்வின், ரோட்டரி சங்கத் தலைவர் திரு. பு. வடிவேல் மற்றும் செயலாளர் திரு. எல். ஜெய்லாணி, மாணவர்கள் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### கால்நடை மற்றும் உணவுத் தொழில்நுட்பப் பட்டப்படிப்புகள் பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சி

காவேரி பாசன வசதி பெறும் மாவட்டங்களைச் சார்ந்த +2 மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்காகத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் கால்நடை மற்றும் உணவுத் தொழில்நுட்பப் பட்டப்படிப்புகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி 30.04.2019அன்று ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்து உரையாற்றினார். கல்லூரியின் கல்விச் சிறப்புப் பிரிவுப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ச. ஈஸ்வரி அவர்கள் மாணவர் சேர்க்கை முறைகள் மற்றும் இணையதள விண்ணப்பப் படிவம் பற்றி விளக்கினார். கால்நடை உடற்கூறியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆ. குமரவேள் அவர்கள் கால்நடை மருத்துவம், பால், உணவு மற்றும் கோழியினத் தொழில்நுட்பப் படிப்புகளுக்கான வேலைவாய்ப்புகள் பற்றி விவரித்தார். தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், திருச்சி,

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.

Licensed to post without prepayment No.TN/PMG(CCR)/WPP-708/2018-2020
REGISTERED No.TN/CC(S)DN/569/18-20

Posted on 31.05.2019 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

கடலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களைச் சார்ந்த 165 மாணவர்களும் பெற்றோர்களும் பங்கேற்றனர்.

### உலகக் கால்நடை மருத்துவ தினம் –2019

திருவள்ளூர் மாவட்டத்தின் பந்திகாவனூர் மற்றும் நல்லன்காவனூர் கிராமங்களில் 27.04.2019அன்று கால்நடை மலட்டுத்தன்மை நீக்கம் மற்றும் நலம்பேணல் முகாமிற்கு ஏற்பாடு செய்து, உலகக் கால்நடை மருத்துவ தினம் கடைப்பிடிக்கப்பட்டது. இதில் மொத்தம் 163 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. முகாமில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

### பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முக்கியக் கூட்டங்கள்

| | | |
|---|---|---|
| அனைத்திந்திய இணைவு ஆய்வுத் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் | : | 13.04.2019 |
| 37ஆவது பாடத் திட்டக் குழுக் கூட்டம் | : | 26.04.2019 |

### பணி ஒய்வு



பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் நிர்வாக அலுவலர் திரு. பி. தாமோதரன் அவர்கள் 30.04.2019அன்று பணி ஒய்வு பெற்றார். 01.05.1961இல் பிறந்த இவர், 33 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் அலுவலகக் கண்காணிப்பாளர் திரு. எஸ். தங்கபாண்டி அவர்கள் 30.04.2019அன்று பணி ஒய்வு பெற்றார். 06.04.1961இல் பிறந்த இவர், 25 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழக உடைமை அலுவலகத்தின் வரைவு அலுவலர் (நிலை II) திரு. ஆர். கேசவன் அவர்கள் 30.04.2019அன்று பணி ஒய்வு பெற்றார். 06.04.1961இல் பிறந்த இவர், 26 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலக தட்டச்சர் நிலை–I திருமதி கே.எம். கஸ்தூரி அவர்கள் 30.04.2019அன்று பணி ஒய்வு பெற்றார். 13.04.1961இல் பிறந்த இவர், 26 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறையின் உடனாள் (முதுநிலை) திரு. எம். ரங்கநாதன் அவர்கள் 30.04.2019அன்று பணி ஒய்வு பெற்றார். 16.04.1961இல் பிறந்த இவர், 24 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலசந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
மருத்துவர் கா.தீ. கவிதா